2. தகவல் கோரல்

(அ) கதிராமங்கலம் O.N.G.C. நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு எதிராக போராடியவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை திரும்பப் பெறக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதிராமங்கலம் பகுதியில் ONGC–க்கு எதிராக, கடந்த மே மாதம் 19 ஆம் தேதியிலிருந்து பல்வேறு கோணங்களில், பல போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எண்ணெய்க் கசிவால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நீராதாரமும் மோசமாகப் போகக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது. இதன் தொடர்ச்சியாக, 2–6–2017 அன்று நடைபெற்றிருக்கக் கூடிய போராட்டத்தையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலே அதற்கு விளக்கம் சொல்கின்றபோது, அதுசம்பந்தமாக 93 பேர்மீது வழக்கு போடப்பட்டிருக்கின்றது என்ற ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு, தொடர்ந்து 5–6–2017 அன்று அமைதியாக ஒரு போராட்டம் அங்கே நடைபெற்றிருக்கிறது. மேலும், 30–6–2017 அன்று பொதுமக்கள், அங்கு இருக்கக்கூடிய தாய்மார்கள், இளைஞர்கள், மாணவர்களெல்லாம் சேர்ந்து நடத்திய போராட்டத்திலே பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அதையொட்டி, பேராசிரியர் ஜெயராமன் உள்ளிட்ட 10 பேர்மீது ஜாமீனில் வரமுடியாத அளவிற்கு வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கடந்த 3 ஆம் தேதியன்று கதிராமங்கலம் மக்களுக்காக, வணிகர்கள் ஒன்று சேர்ந்து கடையடைப்பு போராட்டத்தையும் தொடர்ந்து நடத்தி வருகின்றார்கள். மாணவ, மாணவிகள் ஒரு பக்கத்திலே அணிவகுத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். நேற்றையதினம், சுமார் 27 கட்சிகள் ஒன்று சேர்ந்து ஒரு மிகப் பெரிய பேரணியை அங்கு நடத்தியிருக்கின்றன. எனவே, அங்கு ஒரு சுமுகமான சூழ்நிலையை ஏற்படுத்த, அவர்கள்மீது போடப்பட்டிருக்கக்கூடிய வழக்குகளை உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அத்தனைபேரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்திட வேண்டுமென்று தங்கள்*

வாயிலாக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஆக, அப்படி ஒரு நிலையை, அங்கே ஓர் அமைதி சூழ்நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(ஆ) நெடுவாசல், ஹைட்ரோகார்பன் திட்டம் நிறைவேற்றக்கூடாது என சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றக் கோரிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: நெடுவாசல் பகுதியில் நடந்து கொண்டிருக்கக்கூடிய ஒரு தொடர் போராட்டம். ஒரேயொரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நீங்கள் சொல்வதையெல்லாம் நான் கேட்டுக்கொள்கிறேன். அதில் ஒன்றும் இல்லை. நேற்றைக்கு நீங்கள் அவைக்கு வரவில்லை. (குறுக்கீடு) நேற்றைக்கு இந்த அவையில் உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்கள் இதுசம்பந்தமாகப் பேசினார். அதன்மீது ஏறக்குறைய அரை மணிநேரம் நீண்ட விவாதம் நடந்தது. (குறுக்கீடு) என்னைக் கொஞ்சம் பேச விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னைக் கொஞ்சம் பேச விடுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கொஞ்சம் உட்காருங்கள். (குறுக்கீடு) நேற்றைக்கு இதுசம்பந்தமாக ஒரு பெரிய விவாதம் நடந்து, அதற்குத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஒரு விரிவான பதிலை இந்த அவைக்குக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) அதேமாதிரி, கதிராமங்கலம் சம்பவம் பற்றி ஏற்கெனவே இங்கு நிறைய விவாதங்கள் நடந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்குரிய பதிலைக் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்கிறீர்கள். அதற்கு என்னவென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் சொல்ல வேண்டும். அதை நான் சொல்ல முடியாது. (குறுக்கீடு) ஆகவே, நெடுவாசல் பிரச்சினையைப் பொறுத்தவரையில், நேற்றைக்கு ஒரு நீண்ட விவாதம் நடந்தது. நிறைய விவாதங்கள் நடந்தன. அதற்கு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது என்ன சொன்னார் என்றால், (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.